
# RPN இன் கணிணி கற்கை நெறியின் உடன்படிக்கை

நாம் கணிணி இணையம் மூலம் கற்கைநெறிச் செயற்பாடுகளைச் செயற்படுத்த எண்ணி எமது வகுப்பறையினுள் மாணவர்கள் இணையத்தைப் பயன்படுத்தும் வசதியை ஏற்படுத்திக் கொடுத்துள்ளோம். இதனால் நாம் ஒன்றுகூடி கணிணி கற்கை நெறி மூலம் வரும் நன்மை தீமைகளைப்பற்றி ஆராய்ந்து, அறிந்து இணையத்தை மாணவர்கள் பயனுள்ள முறையில் உபயோகிப்பதற்கான சில வழிமுறைகளை உங்களுக்கு அறியத்தருகின்றோம்.

**1.** நான் பாடசாலையில் ஆசிரியரின் அனுமதியின்றி இணையத்தை உபயோகிக்க மாட்டேன். தேவையேற்படின் நான் உபயோகிக்கும் இணையத்தை ஆசிரியர் மேற்பார்வையிடலாம்.




**2.** எனது பாடசாலை இணையத்தளத்தில் மாணவர்களுக்கென்று பிரத்தியேகமாக ஒதுக்கப்பட்ட செயற்பாடுகள் வேலைத்திட்டங்கள் என்பவற்றை மட்டுமே உபயோகிப்பேன். இணையத்தளத்திலுள்ள விளையாட்டுக்கள் பாடல்கள் போன்றவற்றைப் பதித்து எடுக்க முற்பட மாட்டேன்.





**3.** அண்மைக் காலங்களில் இணையத் தளங்களில் வெளியிடப்படும் செய்திகள் அனைத்தும் உண்மையானவையல்ல என்பதை உணர்ந்து செயற்படுவேன்.





**4.** இணையத்தளத்தில் அதிர்ச்சி தரக்கூடிய சில விடயங்களை நான் கண்டால் இதைப்பற்றி நம்பிக்கையான பெரியவர்களுக்குத் தெரியப்படுத்துவேன்.


**5.** எனக்கு அறிமுகமில்லாதவர்களிடமிருந்து வரும் மின்னஞ்சல்களை நான் திறக்க மாட்டேன். நான் மற்றவர்களுக்கு அனுப்பும் மின்னஞ்சல்களுக்கு நானே பொறுப்பாளி ஆவேன்.




**6.** இணையம் மூலம் தொடர்பை ஏற்படுத்துவோருக்கு என்னைப் பற்றிய தகவல்களைக் கொடுக்கமாட்டேன் (பெயர் தொலைபேசி இலக்கம் மின்னஞ்சல் முகவரி புகைப்படம்). இணையம் மூலம் சில விண்ணப்பங்களைப் பூர்த்தி செய்யும் போது மிகவும் கவனமாகச் செயற்படுவேன்.




**7.** இணையம் மூலம் வெளிப்படும் ஆக்கங்கள்யாவும் வெளியீட்டாளருக்கே சொந்தமானது. இன்னொருவருக்குச் சொந்தமான ஆக்கங்கங்களை நான் தன்னிச்சையாகப் பிரசுரிக்க எவ்விதத்திலும் முயலமாட்டேன்.





**8.** இணையம் மூலம் ஒருவர் வெளியிட்ட ஆக்கங்களை வெளியீடு செய்யும் உரிமை எனக்கில்லை. அப்படிப் பிரசுரிக்க விரும்பின் கட்டுரைகள் புகைப்படங்கள் செய்திகள் போன்றவை எந்த இணையத்தள முகவரியிலிருந்து பெறப்பட்டன போன்ற தகவல்களைக் குறிப்பிடுவேன்.




**9.** இணையத்தின் பயனாக நான் பல்வேறுபட்ட மக்களுடன் தொடர்புகளை ஏற்படுத்தக் கூடியதாக உள்ளது. எனது தொடர்புகளானது ஏனையோரைப்பாதிக்காத வகையில் நான் செயற்படுவேன்.



**10.** ஏனையோருக்குப் பாதிப்பு ஏற்படுத்தும் செயல்களையோ பிரிவினைவாதத்தையோ உண்மைக்குப்புறம்பான செய்திகளையோ இணையத்தில் பிரசுரிக்கப்படும் கெட்ட புகைப்படங்களையோ சமூகத் தொடர்புகள் சந்திப்புகள் பெறுமதி வாய்ந்த நூல்கள் ஆவணங்கள் போன்றவற்றையோ நான் இணையம் மூலமோ கையடக்கத் தொலைபேசிமூலமோ வெளியீடு செய்ய முயல மாட்டேன்.இன்னும் பரப்புரைகள் தேவையற்ற வர்த்தக விளம்பரங்கள் போன்றவற்றையும் வெளியீடு செய்வதும் முற்றாகத் தடை செய்யப்பட்டவிடயங்களாகும்.






**11.** இணையத்தினுள் நுழைவதற்கு எனக்குரிய பிரத்தியேக இலக்கங்கள் எழுத்துக்கள் என்பவற்றை எனது வீட்டுத் திறப்புப் போல் எப்பொழுதும் என்னிடமே வைத்திருப்பேன். என்னுடைய கல்லூரி ஆசிரியர்களுக்கு மட்டுமே எனது பிரத்தியேக இலக்கம் எழுத்துக்களைப் பயன்படுத்தும் உரிமையுண்டு என்பமையும் அறிந்து செயற்படுவேன்.

**12.** மாணவரின் அனுமதியுடனே அவரின் புகைபடங்கள் இணையத்தளத்தில் இணைக்கப்படும்; மாணவர்களின் பெயர்கள் மாத்திரமே புகைப்படங்கள் உடன் ஒரு பாடசாலை இணையத்தளத்தில் இணைக்கப்படும்.




**13.** எனது வகுப்பு இணையத்தளத்திலோ அல்லது பாடசாலை இணையத் தளத்திலோ பதிவு செய்யப்பட்டவற்றையும் சகமாணவர்களின் பதிவுகளிலும் ஆசிரியரினதோ அல்லது சகமாணவர்களினதோ அனுமதியின்றி எவ்வித திருத்தங்களோ வேறுபாடுகளோ செய்ய முயல மாட்டேன்.

அன்பான பெற்றோர்களே,

ஊடகங்கள், படங்கள், தகவல் மற்றும் தகவல் தொடர்பு தொழில்நுட்பங்களை (MITIC) பொருத்தமான முறையில் பயன்படுத்துவதற்கான திறன், ஒவ்வொரு மாணவர்களுக்கும் தெரிந்து இருக்கவேண்டிய ஒரு விடையம் ஆகும்.

இந்த நோக்கில், உங்கள் பிள்ளகள் தனது ஆசிரியர்களின் வழிகாட்டல் மூலமாக, வகுப்பறையில் கணணி கருவிகளை பல்வேறு வேலை செயல்பாடுகளுக்குப் பயன்படுத்தப்படுகிறது.

எண்ணியல் கருவிகளைப் பயன்படுத்துவதால் ஏற்படும் அபாயங்களைப் பற்றி சிந்திப்பது மாணவர்கள் பயிற்சியின் ஒரு பகுதியாகும். வகுப்பறையில் எண்ணியல் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துவதை மேற்பார்வையிடுவதற்காக, பள்ளியில் மாணவர்களுக்குரிய விதிகள் மற்றும் கடமைகளை வரையறுக்கும் ஒரு தொழில்நுட்ப விளக்க அட்டவணைச் சாசனம் பள்ளியில் உள்ளது. உங்கள் பிள்ளையின் பள்ளி நிகழ்ச்சி நிரலில் அதைப் பார்க்கலாம்.

ஒவ்வொரு மாணவரும் ஒரு ஆசிரியருடன் வகுப்பில் அதைப் படிப்பார்கள், உள்ளடக்கத்தைப் புரிந்துகொண்டு அதை மதிப்பதாக உறுதியளிப்பார்கள். சட்ட ரீதியான பிரதிநிதிகள் என்ற வகையில் (பெற்றோர்கள்), இந்த உறுதிப்பாட்டை வலியுறுதிக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம். குடும்ப அமைப்பில் MITIC-இன் பயன்பாடு பற்றி விவாதிக்க உங்கள் பிள்ளைகளுடன் சாசனத்தைப் படிக்கும் வாய்ப்பை நீங்களும் பெறலாம்.